# காலாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2019 )

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 × 1 = 20

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர் --------
   அ) ∴ போயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. வேலைப்பகிர்வு குழு வாரியாக அல்லது பிரிவு வாரியாக உள்ளது --------- எனவும் அழைக்கப் படுகிறது
   அ) ஒருங்கினைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல் இ) பணிக்கமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல்

3. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க -------------- உதவுகிறது.
   அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு நிர்வாகம்
   இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை

4. முதல் நிலைச் சந்தை -------- எனவும் அழைக்கப்படுகிறது
   அ) இரண்டாம் நிலைச்சந்தை ஆ) பணச்சந்தை
   இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகசந்தை

5. மூலதனச் சந்தை ----------- ஐ வழங்குவதில்லை.
   அ) குறுகியகால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள்
   இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

6. கருவூல இரசீது ஆணை என்பது ---------- உடையது.
   அ) அதிக நீர்மைத்தன்மை ஆ) குறைந்த நீர்மைத்தன்மை
   இ) நடுத்தர நீர்மைத்தன்மை ஈ) வரையறுக்கப்பட்ட நீர்மைத்தன்மை

7. நம்பிக்கையற்ற ஊகவணிகர்கள் என்பவர் -----------
   அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

8. செபியின் தலைமையகம் -------------- ஆகும்.
   அ) கொல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

9. தவறான கூற்று எது?
   அ) மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
   ஆ) மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
   இ) மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியும்
   ஈ) மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது

10. கீழ்கண்டவற்றில் எது ஆட்சேர்ப்புக்கான தவிர்க்க முடியாத புறவள ஆதாரமாகிவிட்டது?
    அ) வளாக தேர்வு ஆ) தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு
    இ) இணைய வழி ஆட்சேர்ப்பு ஈ) போட்டி நிறுவனங்கள்

11. நிரப்பப்படாத விண்ணப்பத்தின் நோக்கம் ---------------- பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காகும்.
    அ) நிறுமம் ஆ) விண்ணப்பதாரர்
    இ) வினா நேர்காணல் அட்டவணை ஈ) போட்டியாளர்கள்



12. கூற்று ( A ) : பணி செய்யும் இடத்திலேயே பணியாளர்களுக்கு அங்குள்ள மேற்பார்வையாளரால் (அ) முன் அனுபவம் பெற்றவரால் பணி சார்ந்த போதனை அளிக்கப்படுவது பணிவழி பயிற்சி ஆகும்.
    காரணம் (R) : பணிவழி பயிற்சியின் கோட்பாடு " செய்து கற்றல் மற்றும் சம்பாதித்த பிறகு கற்றல்"
    அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
    ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
    இ) A சரி ஆனால் R தவறு
    ஈ) A தவறு ஆனால் R சரி

13. உடனடி சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
    அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

14. சந்தையிடுகை முறையின் ஆரம்பநிலை ------------------
    அ) முற்றுரிமைமுறை ஆ) பணத்திற்கு மாற்றுதல்
    இ) பண்டமாற்று முறை ஈ) தற்சார்பு உற்பத்தி

15. பொருத்துக
    1. சேவை சந்தையிடுதல் --- a. சந்தையே அல்ல
    2. தனியிட சதை ---- b. சந்தையிடுதல் முறையில் புதியநுட்பம்
    3. வைரல் சந்தை --- c. சந்தையிடுதலின் சிறப்பு பிரிவு
    4. பதுங்கியிருந்து சந்தையிடுதல் ---- d. சந்தையிடுதலின் மற்றொரு யுக்தி

    அ) d a c b ஆ) b c d a
    இ) c a d b ஈ) a b c d

16. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ---------------
    அ) 01.01.1986 ஆ) 01.04.1986 இ) 15.04.1987 ஈ) 15.04.1990

17. ஜான் F. கென்னடி அவர்களின் கூற்றுப்படி பின்வருபவற்றில நுகர்வோர் உரிமைகளில் இடம் பெறாதவை எது?
    அ) பாதுகாப்பு உரிமை ஆ) தேர்ந்தெடுக்கும் உரிமை
    இ) நுகரும் உரிமை ஈ) தெரிவிக்கும் உரிமை

18. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
    அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி
    இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேல குறிப்பிடப்பட்டவை எதுவும் இல்லை

19. ஜி.எஸ்.டி. என்பது -------, ---------, ----------
    அ) சரக்கு மற்றும் வெற்றி வரி ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
    இ) சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

20. -------------- என்பது தனியார் துறைக்கு முன்னர் பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும்.
    அ) தாராளமயமாக்கல் ஆ) தனியார் மயமாக்கல்
    இ) உலகமயமாக்கல் ஈ) பொது நிறுவனம்

## பகுதி — II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. மேலாண்மை என்றால் என்ன?
22. குறியிலக்கு மேலாண்மை என்றால் என்ன?
23. OTCEI ( இந்திய உடனடி பங்கு மாற்றகம்) - சிறு குறிப்பு வரைக.
24. பணச்சந்தை – வரைவிலக்கணம் தருக.
25. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
26. மனிதவள மேலாண்மை என்றால் என்ன?
27. நேர்காணல் என்றால் என்ன?
28. பெயரிடல் என்றால் என்ன?
29. கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
30. நிரந்தர கணக்கு எண் யாரால் வழங்கப்படுகின்றது? அதன் பயன் யாது?

## பகுதி — III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. மேலாண்மை கலையா? அறிவியலா?
32. உடனடி சந்தை மற்றும் எதிர்நோக்கிய சந்தைகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.
33. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
34. காளை மற்றும் கரடி ஊக வணிகர்களை விளக்குக.
35. புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களைகூறுக.
36. மனித வள மேலாண்மையின் சிறப்புபியல்புகளில் மூன்றினை எழுதுக.
37. ஆட்சேர்ப்புக்கான காரணங்கள் யாவை?
38. சமூக சந்தைபடுத்தலுக்கு உதாரணம் தருக.
39. எத்தகைய உரிமைகள் தமக்கு உள்ளது என்பதை நுகர்வோர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்?
40. மூளையின் சிந்திக்கும் ஆற்றல், மனத்திறன் நுண்ணறிவு போன்றவற்றை சோதிக்கப் பயன்படும் பரிசோதனையின் பெயர் என்ன? எந்த அளவீட்டால் அது அளவிடப்படுகிறது? அதன் முதன்மை நோக்கம் யாது?





## பகுதி — IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு.

42. மேலாண்மயின் முக்கிய பணிகளை கூறி விளக்குக

( அல்லது )

தாராளமயமாக்குதலின் நன்மைகளை விளக்குக

43. முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.

( அல்லது )

தேசிய ஆணையத்தின் அதிகாரங்களை விளக்குக?

44. பல்வேறு வகையான நிதிநிறுவனங்களைப் பற்றி விளக்குக. ( ஏதேனும் ஐந்து )

( அல்லது )

செபியின் பணிகளை விவரி

45. ஆட்சேர்ப்பின் அகவள முறையை விளக்குக

( அல்லது )

நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? ( ஏதேனும் ஐந்து )

46. பணியமர்த்தல் கொள்கைகளை விளக்குக

( அல்லது )

சமூக சந்தையிடலை சேவை சந்தையிடலுடன் ஒப்பு நோக்குக

47. பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

( அல்லது )

சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி.



Padasalai